மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா நேரத்தில் குற்றச் சாட்டுகள் கூடாது.

செயற்கை மழை.

*5647. திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காங்கேயத்தில் செயற்கை மழை பொழியவைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது நிறைவேறும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி மிக வறட்சியான பகுதி; மானாவாரிப் பகுதி, கோவை, பெரியார் மாவட்டங்களில் பெரும் பகுதி எப்போதுமே மழை இல்லாது வறட்சிப் பகுதியாக இருக்கிறது. ஆகவே செயற்கை மழையை அந்தப் பகுதியிலே பொழிய வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு முன்னால் எக்ஸ்பெரிமெண்டலாக சில இடங்களில் செய்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் செய்ய வேண்டும். நிலத்தடி நீர் வறண்டுவிட்டது. குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத சூழ்நிலை இருக்கிறது; விவசாயமும் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியைச் சுற்றி இருக்கிற தொகுதிகளின் எம்.எல்.ஏ.க்களை கேட்பீர்களே யானால் உங்களுக்குப் புரியும். ஆகவே இதற்கு அரசு அதிகமான நிதி ஒதுக்கி, எதிர்காலத்திலே—அதாவது விஞ்ஞானத்தில் நாடு முன்னேறி இருக்கிறது—இதற்கு இந்த அரசு ஏன் முயற்சி செய்யக்கூடாது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி இயற்கையாக இருக்கட்டும்; கேள்வி செயற்கையாக இருக்கிறது.

திரு. பி. மாரப்பன் : அரசு முயற்சி எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

1990 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இயற்கையாக இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செயற்கை மழை பொழிய வைப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகளில் போதிய பலன் கிடைக்காத காரணத்தினாலேதான் அதற்காக வாங்கப்பட்ட விமானம் கூட ஆளுநர் ஆட்சிக் காலத்திலே 21, சூலை, 1988-ல் ஏலம் விடப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு. அந்தத் திட்டமே கைவிடப்பட்டு இருக்கிறது. மீண்டும் அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்கிற எண்ணம் இந்த அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மாரப்பன் ஏலத்தில் எடுத்தால் மறுபரிசீலனை செய்வார்களா?

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் ஆட்சியிலே அவர்கள் செய்யவில்லை. நீங்கள் செய்து பாருங்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநரைப் பற்றிய தொடர்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. விதிகளின்படி ஆளுநரைப் பற்றியோ, குடியரசுத் தலைவரைப் பற்றியோ இந்த அவையில் ஏதுவும் குறிப்பிடக் கூடாது.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு இதற்காக ஏதாவது தனியாக முயற்சி எடுத்ததா? அப்படி எடுக்காவிட்டால் உடனடியாக முயற்சி எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே கழக ஆட்சி இருந்தபோது இப்படி ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. அந்த முயற்சியும் போதுமான பலனை அளிக்கவில்லை. அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் அந்த முயற்சி எடுக்கப்பட்டது. அதுவும் போதுமான பயனை அளிக்கவில்லை. குன்னக்குடி வைத்தியநாதனுடைய பிடிலேகூட பயனை அளிக்கவில்லை. (சிரிப்பு).

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் இதற்கு முயற்சி எடுக்கப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பட்டது. அமெரிக்காவிலிருந்து ஜெனரல் கிளார்க் என்பவர் வரவழைக்கப்பட்டு ஹெலிகாப்டரிலிருந்து இரசாயனப்பொடியை தூவினார். ஆனால அப்போது உடனடியாக பலன் அளிக்க வில்லை என்றாலும் அதற்கு அடுத்த 2, 3 பருவ காலங்களில் தொடர்ந்து மழை பெய்த வரலாற்றை மக்கள் மறக்கவில்லை. எனவே மீண்டும் அப்படிப்பட்ட முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ளுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல 1984—85-ல் அந்த முயற்சி எடுக்கப்பட்டு ரூ. 12.9 இலட்சம் செலவிடப்பட்டது. 1985—86-ல் ரூ. 19.72 இலட்சம். 1986—87-ல் ரூ. 20.49 இலட்சம். 1987—88-ல் ரூ. 12.55 இலட்சம் செலவிடப்பட்டது. ஆகவே, இதைச் செய்ததினாலேதான் அடுத்த ஆண்டுகளிலே மழை வந்தது என்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட நிலை வருமேயானால், அந்த நான்கு ஆண்டுகளிலே தொடர்ந்து செய்து இருக்கிறபோது, 1989-லே மழை வந்து இருக்க வேண்டும். ஆனால் உறுப்பினர் அவர்கள் அதைச் செய்வதால்தான் மழை வருகிறது என்று சொல்கிற வாதத்தை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. ஆகவே இந்தத் திட்டத்தில் செலவுதான் அதிக மாகிறது. அதனால் பலன் அதிகமாக இல்லை என்ற காரணத்தினாலேதான் இந்த அரசு அதைப் பற்றிப் பரிசீலனை செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு ; மாண்புமிகு தலைவர் அவர் களே, செயற்கை மழை பொழிவதற்கு இந்த அரசு திட்டங்களை எடுத்து இருக்கிறது, இயற்கை மழை பெய்யச் செய்வதற்கும் ஏதாவது திட்டத்தை இந்த அரசு வைத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஏதாவது கைவசம் வைத்திருக்கிறீர்களா? இருந்தால் அரசுக்கு உடனடியாகக் கொடுத்தீர்கள் என்றால் உங்கள் ஊரிலேயே— ஆலங்குளத்தி லேயே கொளுத்தச் சொல்லுவோம். (சிரிப்பு).

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவரவர்களே, கழுத்து அளவுத் தண்ணீரிலே நின்று தவம் செய்தால் மழை வரும் என்று சொல்கிறார்கள். அப்படி ஏதேனும் முயற்சியை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.(சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அடையாளப் பூர்வ மாக உறுப்பினர் முயற்சித்துப் பார்க்கலாம்.(சிரிப்பு).

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990. மே. 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிந்தால் அதைக் கூவம் ஆற்றிலேயே தொடங்கலாம். (சிரிப்பு).

பேராசிரியர். க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எதிர்பார்த்த பலனைத் தராததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்ன பலனை எதிர்பார்த்தோம் என்பது தெரியும். பொருளாதார ரீதியாக அது சரியாக வரவில்லையா அல்லது சுத்தமாக மழையே பெய்யவில்லையா என்ற முடிவுக்கு அரசு வந்து விட்டதா? அடுத்து வந்த ஆண்டுகளில் மழை பெய்வது பற்றி ஆராய்ச்சி எதுவும் நடத்தப்பட்டதா என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செயற்கை மழைத் திட்டம் வெற்றி பெற வேண்டுமென்று சொன்னால், இயற்கையினுடைய சூழ்நிலைகளும் பொருந்தியிருக்க வேண்டும். குறிப்பாக மேக மண்டலத்தினுடைய விட்டம் 2,000 மீட்டருக்கு அதிகமாக இருக்க வேண்டும்; மேக மண்டலம் 2,500 மீட்டர் உயரத்திற்குள் இருக்க வேண்டும்; மேக மண்டலத்தில் பசுமை 3000 மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும்; மேக மண்டலத்தின் ஓட்ட வேகம் ஒரு வினாடிக்கு 1.5 மீட்டர் மேல் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்ற பொழுதுதான் நாம் எடுக்கின்ற முயற்சிகள் வெற்றி பெறும். ஆகவேதான், இயற்கையும் ஒத்துழைத்தால்தான் இந்தச் செயற்கை மழையேகூட வெற்றி பெற முடிகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேதான் இந்தத் திட்டம் பரிசோதனை மூலமாகச் செய்யப்பட்ட பிறகும் எதிர்பார்த்த அளவிற்கு மழை அளவும் கிடைக்கவில்லை. மழை அளவை எதிர்பார்ப்பதைவிடச் செலவு அதிகமாகிறது. அதன் மூலமாக, வேறு அண்டர்கிரவுண்ட் வாட்டர் மூலமாகப் பெற்றால்கூட இந்தச் செலவிலே அதைப் பெற முடியும் என்ற காரணத்தினாலேதான், இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. சுந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1000 யானைகளைக் கொண்டு கஜ யாகம் நடத்தினால் மழை பெய்யும் என்று சொல்கிறார்களே அதைப்பற்றியும் அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1,000 யானைகளைக் கொண்டா, கொன்றா? (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த திட்டம் உண்மையிலே அப்படி ஒரு நிலைமை இருக்குமானால், கலைஞர்

அவர்கள் சென்ற ஆண்டு எல்லோருக்கும் 5,000 ரூபாய் இலவசமாகக் கொடுத்தே, பலபேருக்குத் திருமணம் செய்து வைத்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே மழையே பெய்யாமல் இருக்கக் கூடாது, பெய்திருக்க வேண்டும்.

தொழிற்சாலைகள் வெளிப்படுத்தும் புகை.

*7213. திரு. ப. சுந்தரம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மறைமலை நகரில் சில தொழிற்சாலைகளில் இருந்து சுகாதாரக்கேடுகளை விளைவிக்கும் புகை வெளிப்படுவது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காற்றை மாசுபடுத்துகின்ற சில தொழிற்சாலைகள் மாசுக்கட்டுப்பாடு உபகரணங்களைப் பொருத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதைச் செயலாக்குவதின் முன்னேற்றம் கூர்ந்து கவனிக்கப்பட்டுவருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 2026, 3533, 5808, 6752 ஆகியவை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS